மாநகர சபை, யாழ்ப்பாணம்

விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 சித்திரை 25 புதன்கிழமை (07.05.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 140




# பிலியந்தல குண்டுத் தாக்குதலுடன் சிங்களவர்களுக்கும் தொடர்புண்டு

## ஒரு மாதத்தில் 121 படையினர் பலி- என்கிறார் பிரதமர்



(கொழும்பு)

கத்தோலிக்கர்களின் புனித பிரதேசமான மடு தேவாலயத்தை படையினர் கைப்பற்றியதற்கு பதிலடியாகவே பிலியந்தலயில் பயணிகள் பஸ்ஸில் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. இத்தாக்குதலுடன் சிங்களவர்களும் தொடர்புபட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனினும் விசாரணைகள் தொடர்வதனால் இது குறித்து மேலதிக விபரங்களை வெளியிட முடியாதுள்ளது என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நாடாளுமன்றில் நேற்று தெரிவித்தார். (08ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய ஆயுத உதவியை ஆதரிக்கிறார் விஜயகாந்

(புதுடில்லி)

இலங்கைக்கு இந்தியா ஆயுத உதவி அளிப்பதை இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கையாகப் பார்க்கக் கூடாது என்று கருத்துத் தெரிவித்துள்ள தேசிய முற்போக்குத் திராவிடக் கழகத் தலைவரும் நடிகருமான விஜயகாந், புதுடில்லியில் நேற்று செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.

அப்போது அரசியல் கூட்டணி உட்பட பல்வேறு கேள்விகளுக்கு அவர் பதிலளித்தார்.

இலங்கை அரசுக்கு இந்தியா ஆயுத உதவிகளை செய்து வருவதாகவும் அது இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக பயன்படுத்தப்படுவதாகவும் விஜயகாந்திடம் சில பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த அவர், தமிழர்களுக்கு எதிராகக் கொடுப்பதாக நீங்கள் ஏன் நினைக்கிறீர்கள். அது வியாபார ரீதியாகக் கூட இருக்கலாம் என்றார்.

சீனாவையும் பாகிஸ்தானையும் தனக்கு நெருக்கமாக (08ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் கிளைமோர் தாக்குதல் இருவர் உயிரிழப்பு; ஒருவர் படுகாயம்

வவுனியா நகர மத்தியில் அமைந்துள்ள நீதிமன்ற வளாகத்திற்கும் பிரதான பொலிஸ் நிலையத்திற்கும் இடையில் இராணுவத்தினருக்கு உணவு விநியோகம் மேற்கொள்ளும் உழவு இயந்திரத்தை இலக்கு வைத்து நேற்று மாலை 5.45 மணியளவில் கிளைமோர் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் இரண்டு பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் ஒருவர் காயமடைந்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர். இத்தாக்குதலில் இராணுவத்தினரின் உழவு இயந்திரம் சிறு சேதத்திற்கு உள்ளாகியுள்ளதுடன் இராணுவத்தினருக்கு எந்த வித சேதமும் ஏற்படவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தில் ஜோசப் அன்ரனி (வயது 45) என்பவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இத்தாக்குதல் சம்பவத்தை புலிகளே மேற்கொண்டுள்ளதாகவும் உயிரிழந்த இருவரின் சடலங்கள் அடையாளம் காண்பதற்காக வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-2)

## அவசரகாலச் சட்டம் மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பு

(கொழும்பு)

அவசர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்கும் பிரேரணை நேற்று 59 மேலதிக வாக்குகளால் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இப் பிரேரணைக்கு ஆதரவாக 76 வாக்குகளும் எதிராக 17 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளது. அரச தரப்பைச் சேர்ந்த கட்சி உறுப்பினர்களும் மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்களும் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித் தனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு எதிராக வாக்களித்தது. (ச-2)

## ஆயுதக்குழுக்களின் துப்பாக்கிகள் அரசாங்கத்திற்கு எதிராக திரும்பும்

### லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

கிழக்கில் உள்ள துணைப்படை ஆயுதக் குழுக்களின் துப்பாக்கிகள் அரசாங்கத்திற்கு எதிராக என்றோ ஒருநாள் திரும்பும் என்பதனை உறுதியுடன் கூறுகின்றோம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போது அவர் இதனை தெரிவித்துள்ளார். முகமாலை:யில் படை நடவடிக்கை தொடர்ச்சியாக நிகழ்ந்து வருகிறது.

இத்தகைய படை நடவடிக்கையில் மாதாந்தம் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்படுகின்றனர். முகமாலையில் படையினர் பின்னடைவை சந்தித்தமைக்கு அரசியல் நிகழ்ச்சி நிரலே காரணமாகும்.

அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்கு ஏற்ப படை நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாலேயே (08ஆம் பக்கம் பார்க்க)

## பிரித்தானிய இராணுவ அதிகாரிகள் யாழ்.நிலைமைகள் குறித்து ஆராய்வு

(கொழும்பு)

இலங்கைக்கான பிரித்தானிய தூதரகத்தின் படைப் பிரிவு ஆலோசகர் லெப். கேணல் ஏ.எஸ்.காஸ் உள்ளிட்ட பிரித்தானிய படை அதிகாரிகள் யாழ்ப்பாணத்தில் இராணுவ அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

பிரித்தானிய படை அதிகாரிகள் கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளனர். பிரித்தானிய படை அதிகாரிகளை பலாலி படைத்தளத்தில் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி ஜி.ஏ.சந்திரசிறி வரவேற்றார்.

அதன் பின்னர் யாழ்.குடாநாட்டின் பாதுகாப்பு நிலைமைகள் விவாதிக்கப்பட்டன. மேலும் (08ஆம் பக்கம் பார்க்க)

## பிள்ளையான் குழுவுக்கு எதிராக கொழும்பில் ஐ.தே.க ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பிள்ளையான் குழுவின் ஆயுதங்களைக் களைந்து கிழக்குத் தேர்தலை நியாயமாக நடத்துமாறு வலியுறுத்தி தலைநகர் கொழும்பில் ஐக்கிய தேசியக் கட்சி நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தியது.

தேர்தல் திணைக்களம் முன்பாக நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தலைமை வகித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவி கருணாநாயக்க, மங்கள சமரவீர உள்ளிட்ட 100க்கும் (08ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# புவராஜ் அணி அபார வெற்றி

(பெங்களூர்)

பந்துவீச்சு, களத்தடுப்பில் யுவராஜ் தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி சிறப்பாகச்செயற்பட பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி சொந்த மண்ணில் 6 விக்கெட்டுக்களால் தோல்வி அடைந்தது.



இந்தியன் பிரிமியர் லீக் அமைப்பின் முதலாவது இருபது -20 தொடரில் நேற்று முன்தினம் இரவு பெங்களூரில் நடை பெற்ற லீக் சுற்றின் 25-வது போட்டியில் ராவிட் தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியும் யுவராஜ் தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற யுவராஜ் சிங் முதலில் களத்தடுப்பை தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி சிறிசாந்த், சாவ்லா ஆகியோரின் சிறப்பான பந்துவீச்சால் 19.2 ஓவர்களில் 126 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சலக விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் ராவிட் 51 பந்துகளில் (9 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 66 ஓட்டங்களையும் ஹோக்லி 34 ஓட்டங்களை எடுத்ததுடன் ஜாபர். வைற்,கலிஸ்,பிரவீன்குமார் மற்றும் சகீர்கான் ஆகியோர் ஓட்டமெதனையும் எடுக்காமல் ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் சிறிசாந்த் 4 ஓவர்கள் பந்து வீசி 16 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் பியூஸ் சாவ்லா 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்கள் நிறைவில் 127 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி; மார்ஷ், சர்வானின் சிறப்பான துடுப்பாட்டத்தால் 18.2 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 127 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இதில் மார்ஷ் 39 ஓட்டங்களையும் சர்வான் 31 ஓட்டங்களையும் எடுத்ததுடன் மகேல ஜெயவர்த்தன,பதான் ஆகியோர் ஆட்டமிழக்காமல் தலா 17 ஓட்டங்களையும் பெற்றனர். உதிரிகளாக 17 ஓட்டங்களை பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி வழங்கியது. பந்துவீச்சில்,சகீர்கான்,பிரவீன் குமார் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக சிறப்பாக பந்துவீசிய கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியின் சிறிசாந்த் தெரிவானார். இவ்வெற்றியுடன் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி தான் விளையாடிய 7-வது போட்டியில் பெறும்5-வது வெற்றியாகும். இதேவேளை இத்தோல்வியுடன் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி தான் ஆடிய 7-வது போட்டியில் சந்திக்கும் 5-வது தோல்வியாகும். (5)

# தோனி அணிக்கு 3-வது தோல்வி

(சென்னை)

துடுப்பாட்டத்தில் சொதப்பிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, லக்ஸ்மன் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியிடம் 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வீழ்ந்தது.

இதன் மூலம் தொடர்ச்சியான 3-வது தோல்வியைச் சந்தித்தது. ஐ.பி.எல் தொடரில் நேற்றிரவு சென்னையில் நடைபெற்ற லீக் சுற்றின் 26-வது போட்டியில் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் லக்ஸ்மன் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற லக்ஸ்மன் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார். இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி முன்னணித் துடுப்பாட்ட வீரர்களின் சொதப்பலான ஆட்டத்தினால் 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 144 ஓட்டங்களை எடுத்தது.

ஒரு கட்டத்தில் 14.5 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 86 ஓட்டங்களை எடுத்திருந்த சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை மோர்கல்,ஜோகிந்தர் சர்மா,ஹோனி ஆகியோரின் அதிரடியான துடுப்பாட்டத்தினால் கௌரவமான இலக்கை அடைந்தது.

இதில் றெய்னா 32 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் மோர்கல் 19 பந்துகளில் (ஒரு பவுண்டரி 2 சிக்ஸர்கள் உட்பட) 29 ஓட்டங்களையும் தோனி 23, ஜோகிந்தர் சர்மா 16, ஹோனி 15 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஆர்.பி.சிங் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பதிலுக்கு 20 ஓவர்களில் 145 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய டெக்கான் சார்ஜர்ஸ் அணி கில்கிறிஸ்டின் அதிரடிச் அரைச்சதத்தின் மூலம் 18 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 148 ஓட்டங்களை எடுத்து 7 விக்கெட் டுக்களால் அபார வெற்றி பெற்றது.

இதில் கில்கிறிஸ்ட் 36 பந்துகளில் (7 பவுண்டரிகள். 3 சிக்ஸர்கள் உட்பட) 54 ஓட்டங்களையும் ஸ்கொட்ஸ் ரைரிஸ் ஆட்டமிழக்காமல் 36 ஓட்டங்களையும் எடுத்தனர்.

இவ் வெற்றியுடன்டெக்கான் சார்ஜர்ஸ் அணி விளையாடிய 7-வது போட்டியில் பெறும் 2-வது வெற்றியாகும். இதேவேளை சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தான் ஆடிய 7-வது போட்டியில் சந்திக்கும் தொடர்ச்சியான 3-வது தோல்வியாகும். (5)

# பேராசிரியர் இராஜரட்ணத்தின் மறைவால் பல்கலைக்கழக சமூகம் துயரடைகிறது

## துணைவேந்தர் இரங்கல்

(யாழ்ப்பாணம்)

எங்கள் சமூகம் கண்ட மிகச்சிறந்த புலமையாளரும் சமூக விஞ்ஞானியுமான ரோனி இராஜரட்ணம் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு யாழ்.பல்கலைக்கழக சமூகம் பெருந்துயரம் அடைகின்றது என பல்கலைக்கழக துணைவேந்தர், பேராசிரியர் என்.சண்முகலிங்கன் வெளியிட்ட இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் முதல் பொருளியல் துறை பேராசிரியராகவும் கலைப் பீடாதிபதியாகவும் நீண்ட காலம் பல்கலைக்கழக பேரவை உறுப்பினராகவும் பணியாற்றி சமூக விஞ்ஞான துறைகளின் கலைத்திட்ட வளர்ச்சிக்கு பெரிதும் பங்காற்றியவர்.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் தொடக்க நிறுவனமான மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரியின் முதல் தலைவராகவும் பேராசிரியர் அவர்களின் கல்விப்பணி அமைந்து சிறந்தது.

உலகப்புகழ் பெற்ற பொருளியல் வரலாற்றுப் பேராசிரியர் ரோனி அவர்களின் பெயரோடு எங்கள் பேராசிரியரின் பெயர் இணைந்திருக்கின்றது என்பது பெருமைக்குரியது. (ச-5)

# பாடசாலை மாணவர்களுக்கான உணவுப் பொருள்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கான உணவு வழங்கும் செயற்திட்டத்தின கீழ் இரண்டாம் தவணைக்கான உணவு விநியோகத்திற்கு. ப.நோ.கூ. சங்கங்களுக்கு ஏற்கனவே வழங்கற் கட்டளைகள் வழங்கப்பட்டு உடன் உணவு விநியோகத்தினை ஆரம்பிக்குமாறு அறிவுறுதப்பட்டுள்ளது.

இருப்பினும் சில ப.நோ.கூ. சங்கங்கள் இதுவரை பாடசாலைகளுக்கு உணவு விநியோகத்தினை மேற்கொள்ளவில்லை என அறியக் கிடைத்துள்ளது.

எனவே ப.நோ.கூ. சங்கங்கள், பாடசாலைகளுக்கு எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன் உணவுப் பொருள்களை தமக்குரிய பாடசாலைகளுக்கு விநியோகித்து முடிக்குமாறு திட்டப்பணிப்பாளர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார்.

9ஆம் திகதிவரை உணவுப் பொருள்களினைப் பெற்றுக் கொள்ளாத பாடசாலை அதிபர்கள் தத் தமது வலயக் கல்விப்பணிப்பாளர் ஊடாக அறிவிக்குமாறு திட்டப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ச)

# முன்னாள் அதிபர் சிவாஜிக்கு மணிவிழா

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் அதிபர் க.சிவாஜியின் மணிவிழா இன்று புதன்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு ஒறேற்றர் சுப்பிரமணியம் மண்டபத்தில் அதிபர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

விழாவில் கல்லூரிப் பழைய மாணவர் சங்கச் செயலாளர் ஆ.சி. கணேசவேல் (ஜே.பி.) வரவேற்புரையையும், வண்.வைத்தீஸ்வராக் கல்லூரி இளைப்பாறிய அதிபர் மூதறிஞர் சிற்பி சிவ.சரவணபவன் ஆசியுரையையும், வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன், வலி.தெற்கு பிரதேச செயலாளர் த.மஞ்சுளாதேவி, யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் ஆகியோர் சிறப்புரையையும் வழங்குவர். (ஓ)


ஐரோப்பிய சுற்றுப்பயணத்திற்கு இதோ! அரியதோர் வாய்ப்பு.

Student Visa — இலைகளுக்கு கடன்வசதி, ஸ்பொன்சர் வசதி,
Hotel Management — தங்குமிட வசதி மற்றும் பகுதிநேர வேலை
Beauty Culture — வாய்ப்பு பெற்றுக் கொடுக்கப்படும்.
Nursing — அடிப்படை தகைமை : க.பொ.த (சாதாரணம்)
Technology — மிகவிரைவில் பயண ஏற்பாடுகள்...

(ஹோட்டல் நிர்வாக பாடநெறிகள், அழகுக்கலை பாடநெறிகள், தொழினுட்ப பாடநெறிகள்)

விசா விண்ணப்பபடிவம் நிரப்புதல், சட்ட ஆலோசனைகள், ஹோட்டல் முன்பதிவு, தங்குமிட வசதிகள், விமான டிக்கட் முன்பதிவு.

விசிட் விசா
பெமிலி விசா
ஹோலிடே விசா

விசா கிடைப்பதற்கு முன்னர் பணம் அறவிடப்படமாட்டாது

பல வருட அனுபவமிக்க எமது சட்டத்தரணிகளால் நிராகரிக்கப்பட்ட விசா மீள்பரிசீலனைக்கு பின் மீண்டும் விசா பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்து தரப்படும்.

உடனடி தொடர்புகளுக்கு : 0725282195

இங்கிலாந்து
கனடா
அமெரிக்கா
ஆஸ்திரேலியா
நியூசிலாந்து
ஜப்பான்
ஜேர்மனி
சுவீடன்

ஐரோப்பா செல்வதற்கான அனுசரணை கடிதங்களுக்கான எமது அனுபவமிக்க சட்ட ஆலோசகர்கள் மூலமாக வீசா தொடர்பாக ஆலோசனைகளை பெற்றுக் கொள்ள எமது அலுவலகத்திற்கு நேரில் வரவும்.

ELIZABETH (PVT) Ltd.
ELIZABETH
No.89A1/1, Hospital Road, Kalubowila, Dehiwala
Website : www.elizabethihs.com E-Mail: elizabethh@sltnet.lk (C-1091)





அக்ஷய திருதியை தங்கத்திருநாள் (2008)
(மே-8) 2008.05.08 (வியாழக்கிழமை)

நிரந்தர தெய்வீகத்தன்மை வாய்ந்த இந்நாளில் தங்க நகைகளை வாங்கி உங்கள் ஐஸ்வர்யத்தையும் அதிர்ஷ்டத்தையும் பெருக்கிக் கொள்ளுங்கள். ஐஸ்வர்யம் நிறைந்த தங்கத் திருநாளில் நீங்கள் தங்க நகைகளை கொள்வனவு செய்யும்போது தங்க ஐஸ்வரியம் உங்களுடன் நிரந்தரமாக நிலைத்திருக்கும். அனைவரும் வருக! தங்க ஐஸ்வரியம் பெறுக! இன்றே உங்கள் தங்க ஐஸ்வரியம் நிலைக்க வாழ்த்துவோர்.

நியூ பிரியங்கா நகை மாளிகை
தங்கப்பவுண் நகை வியாபாரம்
No.2G,ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம், தொ.பே:-0212225644
(C-1090)

## இன்று ஒரு தகவல்

# பிறர்மேல் பழி

இந்த உலகத்தில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவித மான ஆசை உண்டு. ஒரு ராஜாவுக்கு விநோதமான ஆசை வந்தது. அதாவது, வித விதமான விசிறிமட்டைகளை வாங்கி சேகரிக்க வேண்டுமென்பதுதான் அந்த ஆசை.

ஒருநாள் வீதிவழியாக ஒருவன் விசிறிமட்டைகள் விற்றுக்கொண்டு போனான். அவனைக் கண்டதும், உடனே அவனை அரண்மனைக்கு கூட்டி வரச்சொன்னார் ராஜா. அவன் வந்ததும், ''உன்னிடம் ஏதாவது விசேஷமான விசிறி மட்டைகள் இருக்கிறதா?'' என்று கேட்டார். அதற்கு அவன், ''அரசே என்னிடம் இருக்கும் விசிறி மட்டைகள் எல்லாமே விசேஷமானவைதான். பார்ப்பதற்கு சாதாரணமானவை போல் இருந்தாலும் நல்ல தரமானவை. அதனால், ஒரு விசிறிமட்டையின் விலை நூறு ரூபாய்'' என்றான்.

ராஜாவுக்கோ ஒரே ஆச்சரியம். ''பார்த்தால் பத்து ரூபாய் கூடப்பெறாது போலிருக்கே, இதற்குப் போய் இந்த விலை சொல்கிறாயேத அப்படி என்ன விசேஷம் இதில் இருக்கிறது?'' என்று கேட்டார் ராஜா.

''இந்த விசிறிமட்டைகளில் உள்ள விசேஷம் என்னவென்றால், இவை நூறு வருஷம் உழைக்கக் கூடியவை. அதற்கு நான் உத்தரவாதம் அளிக்கிறேன்'' என்றான் அவன். அவனிடம் ஒரு விசிறி மட்டையை வாங்கினார் ராஜா. இருந்தாலும், அவருக்கு ஒரு சந்தேகம். கொஞ்சநேரம் யோசித்துவிட்டு பின், ''இன்றிலிருந்து நான் இந்த விசிறிமட்டையைத்தான் உபயோகிக்கப்போகிறேன். எதற்கும் நீ ஒருவாரம் கழித்து என்னை வந்து பார்'' என்று கூறி அவனை அனுப்பி வைத்தார்.

தினமும் ராஜா அந்த விசிறிமட்டையை எடுத்து விசிறிக் கொண்டே இருந்தார். மூன்றே நாளில் அந்த விசிறியின் நடுக்குச்சி வெளியே வந்து உடைந்துவிட்டது.

ஏமாந்துவிட்டோமோ ; அவன் இனி இந்தப்பக்கமும் வரமாட்டான் என்று நினைத்தார் ராஜா. ஆனால், அவன் சொன்னது போல் சரியாக ஒரு வாரத்தில் திரும்பி வந்தான். ராஜா கோபமாக இருந்தார்.

"உன்னுடைய விசிறிமட்டை நூறுவருஷம் உழைக்கும் என்றாய் ஆனால், ஒரு வாரத்திலேயே ஒன்றுமில்லாமல் போய்விட்டது. ராஜாவை ஏமாற்றினால் என்ன தண்டனை தெரியுமா? உனக்கு" என்றார் ராஜா கோபத்துடன்.

''அரசே நான் தவறு செய்யவில்லை. உங்களுக்குத்தான் அதை எப்படி உபயோகிப்பது என்று தெரியவில்லை. அதை முறையாகவும், சரியாகவும் பயன்படுத்தினால் நிச்சயமாக அது நூறுவருஷம் உழைக்கும். தயவுசெய்து, அதை எப்படி விசிறினீர்கள்? என்று சொல்லுங்கள்'' என்றான் அவன்.

எல்லாரும் விசிறுவது போல் விசிறிக்காட்டினார் ராஜா. ''இப்பொழுது எனக்குப் புரிந்துவிட்டது. நீங்கள் தான் தவறு செய்துவிட்டீர்கள். இந்த விசிறி மட்டையை நீங்கள் உபயோகப்படுத்தவேண்டிய முறையே வேறு'' என்று விளக்க ஆரம்பித்தான் அவன்.

''அதாவது விசிறிமட்டையை எடுத்து முகத்துக்கு முன்னால் அசையாமல் ஒருகையினால் பிடித்துக் கொண்டு தலையை மட்டும் ஆட்ட வேண்டும். விசிறி மட்டையை ஆட்டக்கூடாது. ஆனால் நீங்கள் விசிறியை ஆட்டியிருப்பீர்கள். அதனால் தான் வீணாகப் போய் விட்டது. ஆனால், தப்பு விசிறியில் அல்ல, உங்களில் தான்'' என்றான் அவன். இன்று உலகம் இப்படித்தான் போய்க் கொண்டிருக்கிறது.

நாம் செய்யும் தவறுகளுக்கு அடுத்தவர்கள் மேல் பழியைப் போடுகின்றோம். தவறுகளை நியாயப்படுத்துகின்றோம். புதுசா கார் ஒன்று வாங்கினான் ஒருவன். ஓட்டக்கற்றுக் கொண்டான். ஒரு புளிய மரத்தில் கொண்டு போய் மோதிவிட்டான்.

என்னடா இப்படி பண்ணி விட்டியே? என்று கேட்டால், ''என்மேல தப்பு இல்லீங்க... நான் நேராத்தான் வந்து கொண்டிருந் தேன். எல்லோரும் விலகினாங்க. இந்தப் புளிய மரம் மட்டும் விலகாம இருந்ததால தான் இப்படி ஆச்சு!'' என்றான்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# முகமூடி அணிந்து பெண்களை கடத்துகின்றனர்
# இராமேஸ்வரத்தில் இலங்கை அகதி தெரிவிப்பு

(ராமேஸ்வரம்)

முகமூடி அணிந்து இளம் பெண்களை கடத்துவதாக இலங்கை அகதி கூறினார். இலங்கை மன்னார் மாவட்டத்தை சேர்ந்த எட்டு பெண்கள் 14 குழந்தைகள் உட்பட 35 அகதிகள் கடந்த 4 ஆம் திகதி மாலை 3 மணிக்கு மன்னார் கடற்கரையிலிருந்து இரண்டு படகில் புறப்பட்டு நேற்று முன்தினம் அதிகாலை தனுஷ்கோடி கடற்கரையில் வந்திறங்கினர். தனுஷ்கோடி பொலீசார் விசாரணை செய்து மண்டபம் அகதிகள் முகாம் அனுப்பி வைத்தனர்.



இவர்களில் அமலன்(22) கூறியதாவது: நள்ளிரவில் கறுப்பு முகமூடி அணிந்து வரும் நபர்கள் துப்பாக்கி முனையில் இளைஞர்கள், இளம்பெண்களை கடத்திச் செல்கின்றனர். இவர்கள் வீடு திரும்புவதில்லை. வசதியில்லாத தமிழர்கள் பாதுகாப்புக்காக வீட்டை விட்டு காட்டுக்குள் இடம் பெயர்கின்றனர். முகமூடி அணிந்து வருவது யார் என்றே தெரியவில்லை.

ஒரு வாரத்துக்கு முன் என்னையும் கண்ணை கட்டிகடத்தி சென்று ஒரு வீட்டுக்குள் அடைத்து வைத்தனர். அங்கு என்னை போல் இளைஞர்கள் பலர் இருந்தனர். ஒருவாரத்துக்கு பின் எங்களில் சிலரை மட்டும் ஒன்றாக நிற்க வைத்து போட்டோ எடுத்து விடுவித்தனர்.

மற்றவர்கள் என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை. வீட்டை விட்டு வெளியில் செல்லும் இளம் பெண்களும் காணாமல் போகின்றனர். இதனால் பாதுகாப்புக்காக இங்கு அகதியாக வந்துவிட்டேன் இவ்வாறு அமலன் கூறினார். (அ-5)

# சுயாதீன தேர்தல் நடப்பதற்கான சூழல் கிழக்கு மாகாணத்தில் இல்லை
## தேர்தல் கண்காணிப்பகம் தெரிவிப்பு

கிழக்கு மாகாண தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டது முதல் கடந்த 4ஆம் திகதி 61 இற்கு மேற்பட்ட தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றுள்ளதாக தேர்தல் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் தற்போது சுயாதீன தேர்தல் இடம்பெறுவதற்கான சூழல் இல்லையென தேர்தல் கண்காணிப்பகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அச்சுறுத்தல், தாக்குதல், தீ வைப்புக்கள் தொடர்பாக அம்பாறை மாவட்டத்தில் 29 முறைப்பாடுகளும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 20 முறைப்பாடுகளும் திருகோணமலை மாவட்டத்தில் 12 முறைப்பாடுகளுமாக 61வன் முறை சம்பவங்கள் தொடர்பாக முறையீடுகள் கிடைத்துள்ளதாக பொலிஸ் தேர்தல் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட ஆயுதக்குழுக்கள் செயற்படுவதாக பவ்ரல் அமைப்பின் பேச்சாளர் கீர்த்தி தென்னக்கோன் குற்றம் சாட்டியுள்ளார். இந்த நடவடிக்கைகள் தேர்தல் நடவடிக்கைகளுக்கு அச்சுறுத்தலாக அமையும்.

வேட்பாளர்களின் ஆதரவாளர்கள் கட்சித் தொண்டர்கள் ஆயுதங்களுடன் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுகின்றனர். சில இடங்களில் பொது மக்களின் வாக்காளர் அட்டைகள் பறிக்கப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பகுதியில் தெரு அரசியல் கட்சியைத் தவிர ஏனைய அமைப்புகள் எவையும் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடும் நிலை இல்லை என்றும் இது தொடர்பாக தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்துள்ளதாக அவர் கூறியுள்ளார். (எ-2)

## இராசிபலன்

07.05.2008
(சித்திரை 25, புதன்கிழமை)
துதியை பிற்பகல் 01.38 மணிவரை
ரோகினி நள்ளிரவு 12.00 மணிவரை
இராகுகாலம் 11.55-01.25 மணிவரை
சுபநேரம் 04.25-05.55 மணிவரை
மங்கையற்கரசியார் குருபூஜை

| | |
|---|---|
| மேடம் | தனவிரயம், கல்வியில் ஆர்வம், மனச்சஞ்சலம். |
| இடபம் | நற்கீர்த்தி, மனோதைரியம், காரிய நன்மை, கூட்டுமுயற்சி. |
| மிதுனம் | மனோசங்கடம், அதிக செலவு, ரோகநிலை, திடீர் நன்மை. |
| கடகம் | மாதர்நட்பு, வெகுமானம், நல்ல முயற்சி, தெய்வசிந்தை. |
| சிங்கம் | உஷ்ண நிலை, பிறருக்கு உதவுதல், காரியதாமதம், சுபசெலவு. |
| கன்னி | நண்பர்கள் சந்திப்பு, சயனசுகம், தனதானிய சேர்க்கை, ஆனந்தம். |
| துலாம் | ஆரோக்கியம், பெரியோரால் மதிக்கப்படுதல், காரிய சித்தி. |
| விருச்சிகம் | நிலைமாற்றம், புத்திரரால் கவலை, பிரயாணம், பணவிரயம். |
| தனுசு | அபகீர்த்தி, காரியதடங்கல், தர்மம், போசனசுகம். |
| மகரம் | நல்லமுயற்சி, தனலாபம், உறவினர் சந்திப்பு, பிறருக்கு உதவுதல். |
| கும்பம் | காரிய அனுகூலம், கீர்த்தி, போசனசுகம், உற்சாகம். |
| மீனம் | தாழ்வுநிலை, முயற்சிதாமதம், தனவிரயம், போசனசுகம். |

வளவன்

# புதிய உயர்ஸ்தானிகராலய கட்டடம் பிரிட்டனுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவின் வெளிப்பாடு
## இளவரசர் கிளொஸ்ரர் மோகன் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை மக்களுடனான ஐக்கிய இராச்சியத்தின் உறவின் வெளிப்பாடாக இப்புதிய கட்டிடம் அமைந்துள்ளது என்று இளவரசர் கிளொஸ்ரர் கோமகன் தெரிவித்தார்.

கொழும்பு 7, பௌத்தலோக மாவத்தையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தை நேற்று முன்தினம் பகல் 1 மணியளவில் பிரித்தானிய இளவரசர் கிளொஸ்ரர் கோமகனார் திறந்து வைத்தார்..

அதன் பின்பு அங்கு உரையாற்றிய இளவரசர் கிளொஸ்ரர் கோமகனார் மேலும் கூறுகையில்,

இப்புதிய கட்டடமானது பிரித்தானிய கட்டிடக் கலைவண்ணமும் இலங்கையின் கட்டிடக்கலை வடிவமைப்பையும் பின்பற்றி கலந்து உருவாக்கப்பட்டுள்ளது.

சக்திச்சேமிப்புக்கான ஏற்பாடுகள், சூரியவெளிச்ச தடுப்புமுறைகள், ஒருங்கமைக்கப்பட்ட உள்ளக மற்றும் புறச்சூழல் மற்றும் காபன் படிவைக் குறைக்கும் வகையில்; இக் கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது.

பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தின் புதிய இல்லமாக அமையும் இக் கட்டடம் சம காலத்தில் உள்ள கட்டடங்களுள் குறிப்பிட்டு சொல்லக் கூடிய வடிவமைப்பைக் கொண்டுள்ளது.

இது உயர்ஸ்தானிகராலயப் பணிப்பாளர்களுக்கு சிறந்த வேலைச் சூழலை வழங்குவதோடு விருந்தினர்களுக்கு சிறந்த உ. சரிப்பை யும் வழங்கும். முன்னைய உயர்ஸ்தானிகராலயக் கட்டிடத்தைப் போன்றல்லாது இப்புதிய கட்டிடம். வலது குறைந் தோர் சக்கர நாற்காலியில் செல்லும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ளமை இதன் சிறப்பம்சமாகும்.

இது 10 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்கள் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடம் ஐக்கிய இராச்சியம் இலங்கையுடன் கொண்டுள்ள உறவின் வெளிப்பாடாக அமையும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். (அ-5)

## பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் 2004/2006 கல்வி ஆண்டில் தேசிய டிப்ளோமா பயிற்சியை நிறைவு செய்த ஆசிரியர்களுக்கான பட்டமளிப்பு வைபவம் ஒக்ரோபர் மாதம் 13ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியைச் சேர்ந்த 5 ஆம் அணி ஆசிரியர்கள் 17ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் ஒன்று கூடுமாறும், வெளி மாவட்டங்களில் கடமையாற்றும் ஆசிரியர்கள் கடிதம் மூலம் பீடாதிபதியுடன் தொடர்புகொள்ளுமாறும் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார். (ஓ)

## மியான்மரில் வரலாறு காணாத சேதம்


# நர்கீஸ் புயலுக்கு 15 ஆயிரம் பேர் பலி

# 3 ஆயிரம் பேரைக் காணவில்லை என அச்சம்

(யாங்கூன்)

நர்கீஸ் புயல் மியான்மர் நாட்டை தாக்கியதில் 15 ஆயிரம் பேர் பலியாகி விட்டார்கள். 3 ஆயிரம் பேரைக் காணவில்லை.

சென்னையைத் தாக்க வந்த நர்கீஸ்



புயல் திசை மாறி மியான்மர் நாட்டுக்குச் சென்றது. கடந்த சனிக்கிழமை மியான்மரை இந்தப் புயல் கடுமையாகத் தாக்கி கோரத்தாண்டவம் ஆடியது. அங்கு மணிக்கு 190 கி.மீ. வேகத்தில் புயல் வீசியது.

இதனால் கடலோரப் பகுதியில் அமைந்த யாங்கூன் மற்றும் இர்ரவட்டி டெல்டா பகுதிகள் பலத்த சேதத்திற்கு உள்ளாயின. புயலின் தாக்கம் கடுமையாக இருந்தால் கடலோர பகுதிகளில் இருந்த பல ஆயிரக்கணக்கான வீடுகள் இடிந்து தரை மட்டமாயின.

உறுதியான கட்டடங்கள் கூட அடியோடு இடிந்து விழுந்தன. பெரிய மரங்கள் வேரோடு பெயர்ந்து சாலைகளில் விழுந்தன. மின்சார கம்பங்கள் முறிந்து சாய்ந்தன.

குறிப்பாக இர்ரவட்டி டெல்டா பகுதியில் பொகலாய் லாபுட்டா ஆகிய நகரங்கள் நர்கீஸ் புயலுக்கு சின்னாபின்னமாயின. போரில் குண்டு வீசப்பட்ட பகுதிகளைப் போல் இந்த நகரங்கள் காணப்படுகின்றன.

சேதமடைந்த பகுதிகளில் மீட்பு பணிகளை மேற்கொள்ள உடனடியாக இராணுவம் அனுப்பி வைக்கப்பட்டது. எனினும் அங்கு இடிபாடுகள் பெருமளவில் கிடப்பதால் மீட்புப் பணிகள் மந்த கதியிலேயே நடந்து வருகின்றன.

இதனால் இறந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று மியான்மர் வெளியுறவு அமைச்சர் அச்சம் தெரிவித்துள்ளார்.

முதல் கட்ட தகவல் அடிப்படையில் யாங்கூன் பகுதியில் 100 பேரும் இர்ரவட்டி டெல்டாவில் 251 பேரும் பலியான தாக மியான்மர் அரசின் டெலிவிஷன் அறிவித்தது.

எனினும் இடிபாடுகளை அகற்ற அகற்ற பிணங்கள் ஆக வந்து கொண்டே இருக்கிறது. இதனால் சாவு எண்ணிக்கை பல மடங்காக உயர்ந்துவிட்டது.

கடந்த திங்கட்கிழமை ஒரே நாளில் மட்டும் 3 ஆயிரத்து 600-க்கும் அதிகமான உடல்கள் கைப்பற்றப்பட்டன. இதைத்தொடர்ந்து நர்கீஸ் புயல் தாக்குதல் காரணமாக இறந்தவர்களின் எண்ணிக்கை 4 ஆயிரம் ஆக உயர்ந்து விட்டது.



இடிபாடுகளுக்குள் இன்னும் சிக்கியவர்களில் மேலும் 6ஆயிரம் பேர் பலியாகி விட்டதாக மியான்மர் நாட்டு தூதரக அதிகாரி ஒருவர் பாங்காக்கில் தெரிவித்தார்.

புயலுக்குப் பின் 3 ஆயிரத்துக்கும் அதிகமானவர்களைக் காணவில்லை. இதனால் சாவு எண்ணிக்கை 15 ஆயிரத்தை தாண்டும் என்று அஞ்சப்படுகிறது.

மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள இராணுவம் திங்கட்கிழமை 2ஆயிரத்து 129 பேரை உயிரோடு மீட்டனர். இவர்களில் 41 பேர் படுகாயத்துடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புயல் தாக்கியதன் காரணமாக யாங்கூன் இர்ரவட்டி பகுதிகளில் குடிநீர் விநியோகம் அடியோடு துண்டிக்கப்பட்டது. ஆயிரக் கணக்கானவர்கள் தங்குவதற்கு இடமின்றி அவதிப்பட்டு வருகிறார்கள்.

மேலும் புயல் தாக்கிய பகுதிகளில் உணவு, பெட்ரோல், டீசல் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

மியான்மரில் 45 ஆண்டுகளுக்கும் மேலாக இராணுவ அரசு நடந்து வருவதால் புயலால் பாதிப்புக்கு உள்ளான அந்நாட்டுக்கு மேற்கத்திய நாடுகள் எந்த நிவாரண உதவியும் செய்ய முன்வரவில்லை. செஞ்சிலுவை சங்கம் மட்டும் தற்போது அங்கு நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த நிலையில் மியான்மரில் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக இந்திய அரசு போர்ட் பிளேரில் இருந்து 2 கடற்படை கப்பல்கள் மூலம் உணவு உடைகள், டென்ட்டுகள் போர்வைகள் மருந்து மற்றும் நிவாரண பொருட்களை அனுப்பி வைத்துள்ளது. (அ-5)

## சூரியன் பற்றி ஆராய விண்கலம்; 2015இல் அமெரிக்கா அனுப்பும்

சூரியனைப்பற்றி ஆராய்வதற்காக விண்கலம் ஒன்று 2015ஆம் ஆண்டில் அனுப்பப்படும் என்று அமெரிக்காவின் நாசா அறிவித்துள்ளது.

அமெரிக்காவும், ரஷியாவும் இதுவரை செவ்வாய், வெள்ளி, சனி ஆகிய கிரகங்களுக்கும், சந்திரனுக்கும் விண்கலங்களை அனுப்பி ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளன. சூரியனுக்கு விண்கலங்களை எந்த நாடும் அனுப்பியது கிடையாது. சூரியன் பூமியில் இருந்து வெகு தொலைவில் இருப்பதும், அதன் வெப்ப நிலையும் சூரியனுக்கு விண் கலத்தை அனுப்புவது குறித்து நினைத்துப்பார்த்து கிடையாது.

அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆராய்ச்சிக் கழகம் சூரியனுக்கு விண் கலத்தை அனுப்ப முடிவு செய்து இருக்கிறது. 2600டிகிரி பாரன்ஹீட் வெப்பத்தை தாங்கக் கூடிய அளவு வெப்பத் தடுப்புகளுடன் மூலம் பாதுகாக்கப்பட்ட விண்கலம், சூரியனுக்கு மிக அருகில் செல்லக் கூடும். அப்போது அது வினாடிக்கு 125 மைல் வேகத்தில் சூரியனை சுற்றி வரும்.

சூரியன் பற்றிய ஆராய்ச்சிக்கான திட்ட மேலாளராக ஆன்ட்ரு டான்ஸ்லர் நியமிக்கப்பட்டு இருக்கிறார். இந்த திட்டத்துக்கு 3ஆயிரம் கோடி ரூபாய் செலவிடப்படுகிறது. இதற்கான விண்கலத்தை வடிவமைத்து உருவாக்கும் வேலைகளை ஜோன்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக் கழகத்தின் பிரயோக பௌதிக ஆய்வு கூடம் செய்து வருகிறது. (அ-5)

## உலக தரிசனம்

# அதிபர் முஷரப்பின் கட்டளையை ஏற்க அவரது கட்சித் தலைவர் மறுப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் அதிபர் முஷரப் அவரது ஆதரவு பெற்ற கட்சியான முஸ்லிம் லீக் கட்சி (குரேஷி பிரிவு) யின் தலைமைப்பதவியில் இருந்து ஷுஜாத் உசேன் பதவி விலகவேண்டும் என்று உத்தரவிட்டார். இந்த உத்தரவுக்கு கட்டுப்பட அவர் மறுத்து விட்டார். அதோடு அவர் என்னை பதவி விலகச் சொல்ல உங்களுக்கு அதிகாரம் இல்லை என்றும் கூறி இருக்கிறார்.

### கூட்டணியில் மாற்றம்?


பாகிஸ்தானில் நவாஸ் ஷெரீப் ஆட்சியை கவிழ்த்துவிட்டு முஷரப் பதவிக்கு வந்ததும் அவரது முஸ்லிம் லீக் கட்சியை உடைத்து முஸ்லிம் லீக் (குரேஷி) என்ற பிரிவை ஏற்படுத்தினார். சமீபத்தில் நடந்த பாராளுமன்ற தேர்தலில் அந்த கட்சி தோல்வி அடைந்தது. இந்த நிலையில் பெனாசீர் கட்சியுடன் நவாஸ்ஷெரீப் கட்சி கூட்டணி அமைத்து ஆட்சியை பிடித்துள்ளது.

பதவி நீக்கம் செய்யப்பட்ட நீதிபதிகளை மீண்டும் பதவியில் அமர்த்தவேண்டும் என்று நவாஸ்ஷெரீப் கட்சி கோரி வருகிறது. வருகிற 12ஆம் திகதிக்குள் அவர்கள் பதவியில் அமர்த்தப்படா விட்டால் ஆட்சியில் இருந்து விலகி விடுவோம் என்று நவாஸ் ஷெரீப் கூறி இருக்கிறார்.

### முஷரப் போடும் கணக்கு

நவாஸ்ஷெரீப் ஆட்சியில் இருந்து விலகினால் பெனாசீர் கட்சி அரசுக்கு முஸ்லிம் லீக் (குரேஷி) பிரிவு ஆதரவு அளிக்கும் என்று முஷரப் உறுதி அளித்து இருக்கிறார். பெனாசீர் கட்சியுடன் சுமுக உறவு ஏற்பட வேண்டுமானால் பெனாசீர் கட்சித்தலைவர் சர்தாரியுடன் நல்ல உறவு வைத்து இருப்பவரை கட்சித் தலைவராக நியமிக்கவேண்டும் என்று முஷரப் கருதுகிறார். இப்போதைய தலைவர் சுஜாத் உசேன் எதிர்க்கட்சி தலைவர் சவுதரி பர்வைஸ் இலாஹி ஆகியோர் தொடர்ந்து பதவியில் நீடித்தால் சுமூக உறவு ஏற்படாது என்றும் அவர் நினைக்கிறார்.

சர்தாரியும் சுஜாத் உசேன் இல்லாத குரேஷி பிரிவு முஸ்லிம் லீக் கட்சியுடன் உறவு வைத்து



கொள்ளத்தயாராக இருப்பதாக முஷரப்பிடம் கூறி விட்டார். இதனால் தான் சுஜாத் உசேனை பதவி விலக முஷரப் உத்தரவிட்டார்.

ஆளும் கட்சியுடன் சுமூக உறவை ஏற்படுத்திக்கொண்டால் தன்மீது கண்டனத் தீர்மானம் கொண்டுவரப்படாமல் தப்பித்துக் கொள்ளலாம் என்றும் முஷரப் கணக்குப்போட்டிருக்கிறார். (அ-5)

# எனது கணவரின் வாழ்க்கைப் படத்தில் நானே அவரது மனைவியாக நடிப்பேன்

## வீரப்பனின் மனைவி தெரிவிப்பு

(சேலம்)

வீரப்பனின் வாழ்க்கை வரலாறு திரைப்படமாக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதில் அவரது மனைவியான முத்துலட்சுமியே வீரப்பனின் மனைவியின் பாகத்திற்கு நடிக்க இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.



சந்தனக் கடத்தல் வீரப்பனின் கதையை படமாக்கவுமுனைந்தனர். ஆனால் முத்துலட்சுமி ஆட்சேபித்ததால் இந்த முயற்சிகள் கைவிடப்பட்டன.

இந்த நிலையில் வீரப்பனை அரசியல்வாதிகளும் காவல் துறையினரும் எந்த அளவுக்கு தவறாகப் பயன்படுத்தினார்கள். அவரை வைத்து எவ்வாறெல்லாம் செயற்பட்டார்கள் என்பதை சித்திரிக்கும் வகையில் ஒரு படம் தயாராகவுள்ளதாம். அதில் முத்துலட்சுமி நடிக்க உள்ளார். இதில் அவர் முத்துலட்சுமியாகவே நடிக்க உள்ளார். இது குறித்து அவர் கூறுகையில்,

இதில் என்னை நடிக்கக் கோரியவர்கள் இணைத் தயாரிப்பாளராகவும் இருக்க வேண்டும் எனக் கேட்டுள்ளனர்.

இது குறித்து நான் ஒரு வாரத்தில் பதிலளிப்பேன் எனது கணவரின் வாழ்க்கையை மற்றவர்கள் படமாக எடுத்தால் அதில் தவறுகள் ஏற்பட வாய்ப்புண்டு.

அதனால் தான் நானே எனது கணவரின் வாழ்க்கை வரலாற்றை படமாக்கலாம் என எண்ணியுள்ளேன். எனினும்இது குறித்து இறுதி முடிவு எடுக்கவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் வீரப்பனின் வாழ்க்கை வரலாற்றுத் திரைப்படம் தொடர்பாக நடிகர் பிரகாஷ் ராஜையும் முத்துலட்சுமி அணுகியதாக கூறப்படுகிறது. (அ-5)

# கற்பழிப்பு, போதைப் பொருட் கடத்தல்; ஈரானில் 12 பேருக்கு தூக்குத்தண்டனை

(டெக்ரான்)

ஈரான் நாட்டில் நேற்று முன்தினம் 12 குற்றவாளிகளுக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப் பட்டது. அவர்களில் 3 பேர் கற்பழிப்பு குற்றத்துக்காகவும், 9 பேர் போதை பொருள் கடத்தலுக்காகவும் தண்டிக்கப்பட்டனர்.

வடகிழக்கு பகுதியில் உள்ள போஜ் நோர்ட் என்ற நகரில் 9 போதை பொருள் கடத்தல் காரர்களும் தூக்கில் போடப்பட்டனர். அவர்களில் ஒருவர் மட்டும் பொது இடத்தில் தூக்கில் போடப்பட்டார். பொது இடத்தில் தூக்கு தண்டனை நிறைவேற்றப்படக் கூடாது என்று தலைமை நீதிபதி அயோ துல்லா மக்மூத் ஹாஷ்மி அறிவித்ததற்கு பிறகு பொது இடத்தில் தூக்கிலிடப்பட்டது இதுதான் முதல் முறை ஆகும்.

11பெண்களை கடத்தி கற்பழித்த குற்றத்துக்காக 3 பேருக்கு அக்வாஸ் நகரில் தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டது. இந்த 12 பேருடன் சேர்த்தால் இந்த ஆண்டு மட்டும் இது வரை 86 பேர் தூக்கிலிடப்பட்டனர். (அ-5)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வசந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை யினால் வெள்ளிக்கிழமை தோறும் நடை பெற்று வரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10.30 மணியளவில்ஆவரங்கால் சஹானா இசைக் கலைஞர்கள் வழங்கும் பக்தி இசை இடம் பெறவுள்ளது. (ஓ-35)

## கல்விச் செயற்பாடுகள் மீளாய்வுக் கூட்டம்

வடமராட்சி கல்வி வலய உயர் மட்ட கல்வி செயற்பாடுகள் தொடர்பான மாதாந்த மீளாய்வுக்கூட்டம் இன்று புதன்கிழமை மற்றும் நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் காலை 8.30 முதல் மாலை 4.30 மணி வரை நடைபெறவுள்ளது.

இதில் கலந்துகொள்பவர்களுக்கான கொடுப்பனவும் வழங்கப்படும். இக் கூட்டத்திற்கு ஏற்கனவே அழைக்கப்பட்ட அதிபர்கள் தவறாது சமூகமளிக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஓ-19)

## தர உள்ளீடு விபரம்

வடமராட்சி வலயக் கல்வி அலுவலகம் 2006 ஆம் 2007 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற தர உள்ளீட்டுக் கொள்வனவும் விநியோகமும் தொடர்பான விபரங்களைக் கேட்டுள்ளது.

நிதி ஆணைக்குழுவின் FC/IRA இலக்க 1/4/2008 ஆம்திகதிய கடிதத்தில் கோரப்பட்டவைக்கு அமைய தரமான உள்ளீட்டு விபரங்களைத் தயாரித்து இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பு வடமராட்சி வலய கல்வி அலுவலகக் கணக்காளரிடம் சமர்ப்பிக்கு மாறு வடமராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட சகல அதிபர்களையும் வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுக்கொள்கின்றார். (ஓ-19)

## செல்வச்சந்நிதி ஆலயத்தில் மண்டலாபிஷேக பூர்த்தி விழா

(மருதங்கேணி)

தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய த்தின் 41 ஆம் நாள் மண்டலாபிஷேக பூர்த்தி விழா 17 ஆம் திகதி சனிக்கிழமை சந்நிதியினர் ஆச்சிரம அனுசர னையுடன் நடைபெறவுள்ளது. காலை 6 மணிக்கு 10008 மகா சங்காபிஷே கமும் சண்முக அரிச்சனையும் நடைபெற்று மதியம் பூந் தண்டிகையில் சந்நிதி வேற்பெருமான் வீதியுலா வந்தருளுவார்.

விஷேட நிகழ்வாக யாழ்.நகரில் முன்னணி நாதஸ்வரக்கலைஞர்களின் நாதஸ்வர இசைக்கச்சேரியும் நடைபெறும். (ஓ-35)

## கந்தபுராண படன பூர்த்தி விழா

திருநெல்வேலி கலங்காவற்பிள்ளையார் கோவிலில் நாளை வியாழக்கிழமை அன்று காலை ஆசிரியை செல்வி தங்கப்பொன் தலைமையில் கந்த புராணபடன பூர்த்தி விழா நடைபெறவுள்ளது. (அ)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 15ஆவது வருடாந்த மாநாடு

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 15 ஆவது வருடாந்த மாநாடு இன்று புதன் கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று நாட்கள் யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இம் மாநாடு வட மாகாண மக்களினது விஞ்ஞான தொழில்நுட்ப அறிவையும் ஆற்றலையும் மேம்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்டு கடந்த 14 ஆண்டுகளாக நடாத்தப்படுகிறது. 15ஆவது ஆண்டு மாநாட்டின் முதல் நாள் நிகழ்வுகள் 4 அமர்வுகளில் நடைபெறவுள்ளன.

இதில் முதலாவது அமர்வு இன்று காலை 8.45 மணிக்கு யாழ்.விஞ்ஞான சங்கத் தலைவர் பேராசிரியர் கே.கந்தசாமி தலைமையில் ஆரம்பமாகும். நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் "யாழ்ப்பாண மாவட்டத்தில் சுகாதார சேவைகளிலுள்ள சவால்கள்" எனும் பொருளில் கருத்துரை வழங்குவார்.

முன்னால் தலைவர் பேராசிரியர் ஏ.சண்முகதாஸ் நன்றியுரை வழங்குவார். இரண்டாவது அமர்வு காலை 9.45 மணி யளவில் கலாநிதி என்.சிவராஜா தலைமையில் நடைபெறும். இவ்வமர்வில் "குழந்தைப் பருவத்தின் தேவைகள்" (Childhood needs) எனும் கருப் பொருளைக் கொண்ட கருத்தாக்கச் செயலமர்வு இடம்பெறும். இதன் போது துறைசார் வல்லுநர்களான யாழ். போதனா வைத்தியசாலை உளவியல் ஆலோசகர் வைத்திய கலாநிதி எஸ்.சிவயோகன் "உளவியல் தேவைகள்" எனும் தலைப்பிலும். குழந்தை மருத்துவ ஆலோசகர் வைத்திய கலாநிதி க.அருள்மொழி "பௌதீக தேவைகள்" எனும் தலைப்பிலும், வைத்திய ஆலோசகர் வைத்திய கலாநிதி சி.எஸ்.யமுனானந்தா "நோய் தடுப்பு தேவைகள்" எனும் தலைப்பிலும், தேசிய கல்வியியல் கல்லூரி துணை முதல்வர் வி.தனபாலன் "கல்விக்கான தேவைகள்" எனும் தலைப்பிலும் கருத்துரை வழங்கவுள்ளனர்.

மூன்றாவது அமர்வு கலாநிதி ஆர்.விக்கினேஸ்வரன் தலைமையில் பி.ப.1.30 மணிக்கு ஆரம்பமாகும். இவ்வமர்வில் விஞ்ஞான சங்கத்தின் பிரயோக விஞ்ஞானப் பிரிவின் தலைவர் கலாநிதி ச.இளங்குமரன் "பிரயோக ஆய்வில் பயன்படும் அதி சிறந்த மாதிரியின் அளவு" எனும் பொருளிலும், சமூக விஞ்ஞானப் பிரிவின் தலைவர் கலாநிதி த.கலா மணி "பாடசாலை கணித வியல் பிரச்சினைத் தீர்வு காணும் உத்திகள் எனும் பொருளிலும் உரையாற்ற வுள்ளனர்.

அடுத்து பி.ப.3.15 மணிக்கு ஆரம்பமாகும். நான்காவது அமர்வில் ஆய் வாளர்களினால் ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கும் நிகழ்வு ஒரே நேரத்தில் 4 இடங்களில் இடம் பெறும். இதில் மொத்தம் 69 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படும். (ஓ)

## மகா சங்காபிஷேகமும் மண்டலாபிஷேகமும்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு சகஸ்ர (1008) மகா சங்காபிஷேகமும் 10 மணிக்கு விஷேஷ மண்டலாபிஷேகமும் நடைபெறவுள்ளது. (ஓ)

## கூட்டுறவு நகர் திறப்பு விழா

(ஊர்காவற்றறை)

ஊர்காவற்றுறையில், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் கூட்டுறவு நகர் இன்று காலை 10 மணிக்கு சங்கத் தலைவர் சி.சுந்தரலிங்கத்தினால் திறக்கப்படவுள்ளது. (ஓ-72)

## சுகாதாரப் பகுதியினரின் அன்பளிப்பு

(ஊர்காவற்றுறை)

யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் தலைமையிலான குழுவினர் நேற்றுக் காலை 10 மணியளவில் ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் கர்ப்பிணித் தாய்மார் மற்றும் குழந்தைகட்கான போஷாக்குக்குறைவு, நுளம்புவலை மற்றும் விளையாட்டுப் பொருட்கள் அன்பளிப்பாக வழங்கினர். (ஓ-72)




# சட்டவிரோத மணல் கடத்தலில் ஈடுபட்ட லொறிச் சாரதிக்கு நீதிமன்றம் அபராதம்

(யாழ்ப்பாணம்)

மணல் விநியோக அனுமதிப்பத்திரத்தில் மோசடி செய்து சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்சென்று விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த லொறிச் சாரதி ஒருவரை பருத்தித்துறை நீதிமன்றம் கடுமையாக எச் சரித்ததுடன் அவருக்கு 20 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்துள்ளது.

புத்தூரைச் சேர்ந்த இந்த லொறிச்சாரதி மணல் விநியோக அனுமதிப்பத்திரத்தில் மோசடி செய்து சட்டவிரோதமாக மணல் அகழ்ந்து சென்றார் என்ற குற்றசாட்டின் பேரில் பருத்தித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதிபதி கே.அரியநாயகம் முன்னிலையில் ஆஜர் செய்தபோது லொறிச் சாரதி குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

அதனையடுத்து லொறிச் சாரதிக்கு 20 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் சட்டவிரோதமாக கடத்தப்பட்ட மணல் பறிமுதல் செய்யப்பட்டது. இம்மணல் கடத்தலில் ஈடுபட்ட லொறி வடமராட்சிப் பிரதேசத் துக்குள் செல்லக்கூடாது என்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (அ-5)

## மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப்போட்டி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இலங்கை வங்கி புத்தாண்டையொட்டி பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன் நடாத்திவரும் மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியின் கால் இறுதி ஆட்டத்தில், இன்று புதன்கிழமை அல்வாய் மைக்கல் விளையாட் டுக்கழகத்தை எதிர்த்து தும்பளை விவேகானந்தா விளையாட்டுக்கழகம் மோதுகின்றது. நாளை வியாழக்கிழமை பருத்தித்துறை திருநாவலூர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ஓ-52)

## சாயி மந்திரில் இசைக் கச்சேரி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை சாயிமந்திரில் நாளை வியாழக்கிழமை தென்னிந்திய சாயி வரதன் இசைக் குழுவினரின் இசைக்கச்சேரி நடைபெறவுள்ளது. கச்சேரியில் பஜனை மற்றும் பக்தி இசைப் பாடல்கள் இசைக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது. (ஓ-52)

## இந்து குருமார்களுக்கான அடையாள அட்டைகள்

(நல்லூர்)

இந்து குருமார்களுக்கான ஒரு தொகுதி அடையாள அட்டைகள், யாழ்.செயலகத்தில் அமைந்துள்ள இந்து கலாசார அலுவல்கள் திணைக்கள மாவட்ட அலுவலகத்திற்கு கிடைத்துள்ளதாகவும், அவற்றை புதன்கிழமைகளில் அலுவலகத்திற்கு வந்து பெற்றுக் கொள்ளுமாறும், இந்து கலாசார அலுவல்கள் திணைக்கள மாவட்ட அலுவலகம் அறிவித்துள்ளது. (அ-7)

## ஆன்மீக சொற்பொழிவு

புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் 11 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை 10 மணி பூசை முடிவுற்றதும் "வாழ்க்கையும் வைஷ்ணவமும்" என்னும் விடயம்பற்றி யாழ்.போதனா வைத்தியசாலை உத்தியோகத்தர் இ.புனேசன் ஆன்மீக சொற்பொழிவாற்றுவார். (ஓ-35)

## மாணவர் பாராட்டு விழா

உசன் ஐக்கிய நாணய சங்கத்தினர் உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த உசன் இராமநாதன் மகாவித்தியாலய மாணவர்களையும், உசன் கிராம சேவையாளர் பிரிவில் வசித்துத் தற்காலிகமாக இடப்பெயர்வில் வேறு பாடசாலையில் கற்றுச் சித்தியடைந்தமாணவர்களையும் சேர்த்துப் பாராட்டுகின்றது.

சங்கத்தலைவர் க.பேரம்பலம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் என்.சத்தியநாதனும் சிறப்பு விருந் தினர்களாகப் பாடசாலை அதிபர் எஸ்.மனோ கரனும், யாழ்.மாவட்ட கூட்டுறவு அப்விருத்தி உத்தியோகத்தர் திருவாட்டி க.நல்லதம்பியும்,உசன் கந்தசுவாமி கோவில் அறங்காவலர் கு.விஸ்வதாஸும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ)



யாழ்.மாவட்ட இந்துமாமன்ற அனுசரணையுடன் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் உள்ள இந்து ஆலயத்தில் இந்துமா மன்ற இணைப்பாளர் எஸ்.குணராசா தலைமையில் எழுபத்தைந்து கல்லூரி மாணவிகளுக்கு சமய தீட்சை வழங்கப்படுவதை படத்தில் காணலாம்.

# தேர்தல் நீதியாகவும் சுதந்திரமாகவும் நடைபெற பங்களிப்பு வழங்க வேண்டும்

## இராணுவ தளபதிக்கு ஐ.தே.க.செயலாளர் கடிதம்

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் ஐ.தே. க வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் ஆயுதக் குழுக்களால் அச்சுறுத்தப்பட்டு வருகின்றார்கள். வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்ட தினத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டு வரும்அச்சுறுத்தல்கள் தேர்தலுக்கு அண்மித்த தினங்களில் மேலும் அதிகரிக்கலாம்.

எனவே நீதியானதும் சுதந்திரமானது மான தேர்தலை நடத்த இராணுவம் தனது பங்களிப்பை வழங்க வேண்டும் என்று ஐ.தே. கவின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க கோரியுள்ளார்.

இராணுவத் தளபதி சரத் பொன் சேகாவுக்கு தொலைநகல் மூலமும், பதிவுத் தபால் மூலமும் ஐ. தே.கட்சி பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இக் கடிதத்தின் பிரதிகள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தப்பாய ராஜபக்ஷ, கிழக்கு மாகாணத்திற்கு பொறுப்பான கட்டளையிடும் தளபதி மேஜர் ஜெனரல் லியனகே உட்பட ஒன்பது உயர் இராணுவ அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2008.05.10 ஆம் திகதி நடைபெறவுள்ள கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஐ.தே கட்சியும் போட்டியிடுவதை நீங்கள் அறிவீர்கள் கிழக்கில் நியாயமான, சுதந்திரமான தேர்தலை நடத்த முடியாத சூழ்நிலை தலை தூக்கியிருந்த போதும் அம் மாகாணத்தின் மக்களின் ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பதற்காகவே ஐ.தே.கட்சி தேர்தலில் போட்டியிட தீர்மானித்தது.

வேட்பு மனுக்கள் தாக்கல்செய்யப்பட்ட தினத்திலிருந்து எமது வேட்பாளர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் ஆயுதக் குழுக்களால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக தேர்தல் ஆணையாளருக்கும் தேர்தலுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கும் எழுத்து மூலமாகவும் வாய் மூலமாகவும் முறைப்பாடு செய்துள்ளோம்.

தற்போதைய சூழ்நிலையில் தேர்தல் நடத்தப்படவுள்ள காலம் நெருங்குகையில் ஆயுதக் குழுக்களின் அச்சுறுத்தல்கள் மற்றும் வன்முறைகள் மேலும் அதிகரிக்கலாம்.

நீதியானதும் , சுதந்திரமானதுமான தேர்தலை நடத்துவதில்இராணுவத்தினருக்கு விசேட கடப்பாடு இருப்பதாக நாம் நினைக்கின்றோம்.

எனவே கிழக்கில் வன்முறைகளற்ற தேர்தலை நடத்த இராணுவம் தனது கடமையை நிறைவேற்ற வேண்டுமென தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

(அ-5)


University of Jaffna
Faculty of Arts

**Application for Diploma in English for Teachers of English (DETE) Repeat Examination**

Applications are invited from referred candidates for the above examination.

**Examination for Diploma in English for Teachers of English - (DETE) Repeat -2008**

- Application forms will be available at the Dean/ Arts Office **from 8TH May 2008**
- Application forms should be handed overat the Dean/Arts Office **on or before** 16th May 2008
- Examinations will be conducted on 07/06/08 & 08/06/08 . Detailed Time Table will be annexed with the application form.

(You may contact Head /ELTC for further details)

Registrar
University of Jaffna.

(C/1089)


# அமைச்சுக்கள் சிலவற்றின் செயலாளர்கள் மாற்றம்

(கொழும்பு)

அமைச்சுக்கள் சிலவற்றின் செயலாளர்கள் திங்கட்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மாற்றப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த நியமனங்களை வழங்கியுள்ளார்.

கைத்தொழில் அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் செயலாளராக கடமையற்றிய தொசப்பால ஹேவகே துறைமுக விமான சேவைகள் அமைச்சின் செயலாளராகவும், துறைமுக விமான அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றிய டி.டி.பி. கொல்லுரே போக்குவரத்து அமைச்சின் செயலாளராகவும் போக்குவரத்தின் அமைச்சின் செயலாளராக இருந்த டபிள்யூ.ஏ. சோமவீர கிராமிய கைத்தொழில் மற்றும் சுயதொழில் அமைச்சின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ள னர்.

சுற்றுலாத்துறை அமைச்சின் மேலதிக செயலாளராக இருந்த கே.ஏ.டி.ஜோர்ஜ் மைக்கேல் அந்த அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தேசிய பாதுகாப்பு, மக்கள் பாதுகாப்பு நீதியமைச்சின் மேலதிக செயலாளராக பதவி வகித்த சுனில் எஸ்.சிறிசேன வெளிநாட்டு வேலை வாய்ப்பு தொழில் உறவுகள் அமைச்சின் செயலாளராகவும் நகர அபிவிருத்தி புனித பூமி அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளராக கடமையாற்றிய பி.எவ்.எம். ரட்ண சிறி கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் முதலீட்டு அமைச்சின் செயலாளராகவும் நிய மனம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் அமைச்சின் செயலாளரான இந்திராணி சுகததாஸ கடந்த 2ஆம் திகதி முதல் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் புதிய செயலாளராக.ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார். (அ-5)

# ஆசிய தேர்தல்கள் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் 17 பேர் இலங்கை வருகை

கிழக்கு மாகாண சபை தேர்தலை கண்காணிப்பதற்காக ஆசியதேர்தல்கள் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் 17 பேர் இலங்கை வந்தடைந்தனர். பத்து நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இவர்கள் தங்களது கண்காணிப்புப் பணிகளைநேற்றுமுதல் ஆரம்பித்துள்ளனர்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள இவர்கள் தேர்தல்கள் திணைக்கள ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கவை தேர்தல்கள் திணைக்களத்தில்வைத்து திங்கட்கிழமை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நீதியாகவும் நேர்மையாகவும்நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் சில உள்ளூர் கண் காணிப்புக்குழுக்கள் ஈடுபடுத்தப் பட்டிருப்பதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் அந்த பிரதிநிதிகளிடம் எடுத்துரைத்துள்ளார்.

இதே வேளை மட்டக்களப்பு, அம்பாறைஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தேர்தல்கள் தெரிவத்தாட்சி அதிகாரிகள், தேர்தல்கள் தொடர்பான தற்போதையநிலைமைதொடர்பானஅறிக்கையை தேர்தல்கள் ஆணையாளரிடம் கையளித்துள்ளனர். (அ-5)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## ஆவாரை

B.N-Cassia auriculata
Family-Leguminosae
Eng-Tanner's cassia
Sinh-Ranawara

இது சுமார், 7-8 அடி உயரம் வரைக்கும் வளரும் ஒருவகை பெருங்குத்துச்செடி. பல கிளைகள் வேரிலிருந்து தோன்றி விரிந்து வளரும் சிறிது மஞ்சள் கலந்த பசுமை நிறமுடைய இந்த கிளைகளின் கீழ் இலையடிச் செதில் காணப்படும். மெல்லிய இதழ்களுடைய மஞ்சள் நிறப் பூக்களைக் கொண்டிருக்கும். தட்டையான விதைகள், கருஞ்சிவப்பு



நிறமுடையவை. இச்செடி பல ஆண்டுகள் வரை உயிர் வாழும். விதைகள் மூலம் பயிரிடலாம். யாழ் மாவட்டத்தில் பரவலாகவும் சிற்சில இடங்களில் சிறிது அதிகமாகவும் தானாக முளைத்து வளரும். கைவிடப்பட்ட தரிசு நிலங்களில் நிறையளவில் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. உதாரணமாகக் கைதடி, கோகிலாக் கண்டி. இளவாலை, மட்டுவில் போன்ற இடங்களில் பரம்பல் அதிகமாகக் காணப்பட்டது.

மருத்துவத்தில் பயன்படும் பகுதிகள்-
வேர் (Root) இலை (Leaves)
பூக்கள் (Flowers) பட்டை (Bark)
விதை (Seeds)

**மருத்துவச்செய்கை:** இலை,பூ,பட்டை-
துவர்ப்பி(Astringent)
பலகாரி(Tonic)
விதை-குளிர்ச்சியுண்டாக்கி (Refrigerant)
வேர்-உடற்தேற்றி(Alterative)
மருத்துவச் சத்துக்கள்-Tannin
Sennopicrin
Oxymethyl an -thraquinone

**டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன்** (M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ் பல்கலைக்கழகம்,கைதடி

**மருத்துவப்பயன்கள்-**

1) இதன் இலை விழுதை உடம்பிலும் தலையிலும் அப்பித்தேய்த்து குளிக்க உடம்பின் சூடு தணியும்

2) பூக்களை சம்பல், கூட்டுக்கறியாக சமைத்து உண்ணலாம். நீரிழிவுக்கு சிறந்தது.

3) உலர்ந்த பூ இதழ்களைக் கொண்டு பானம் தயாரித்து பருகலாம் உடலெரிவு, சிறுநீர் எரிச்சல் தணியும்.

4) பூ இதழ்களை குடிநீர் செய்து இனிப்பு நாரத்தம் பூச்சாறும் பனை வெல்லமும் சேர்த்து குடிக்க உட்சூடு, தாகம், வறட்சி, நீங்கி உடம்பிற்கும் குளிர்ச்சியையும், பொன்னிறத்தையும் கொடுக்கும்.

5) ஆவாரையிலை,பூ, பட்டை, வேர்,காய் இவற்றை நிழலில் உலர்த்தி சம அளவாக எடுத்துப் பொடித்து சூரணம் செய்து அரித்து அதில் 1 தேக்கரண்டி தூளை 30ml நீரில் ஊற வைத்து 20 நிமிடம் கழித்து பின்பு அந்நீரை வடித்து காலை, மாலை, குடிக்க நீரிழிவு, வெள்ளை உட்சூடு , தாகம் தீரும்.

6) ஆவாரம்பட்டையை குடிநீரிட்டு வாய்ப்புண், பற் சூத்தை போன்ற நிலைமைகளில் வாய் கொப்பளித்து வரலாம்.

7) ஆவாரம்பூவுடன், பச்சைப்பயறை சேர்த்து அரைத்து உடம்பில் ஏற்படும் கடிக்கு பூசிக்குளிக்கலாம்.

# அழைப்புக்கட்டளை இல. 16 -பிரிவு 55(1)

யாழ்ப்பாணம் என்னுமிடத்திலுள்ள/ மாவட்ட நீதிமன்றில்

தயாளன் ஞானரூபி,
இல, 687/15, மானிப்பாய் வீதி.
ஓட்டுமடம்.

வழக்கு இல, மண நீக்கம் /844 -வழக்காளி

எதிர்

பசுபதி தயாளன்,
வலதுகரை 1ஆம் கண்டம்,
முத்தையன் கட்டு ,
ஒட்டிசுட்டான்.

-எதிராளி

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி தனக்கும் உம்க்கும் இடையே 30. 09.1996 ந் திகதியன்று இடம்பெற்ற திருமணப் பதிவினை இரத்து செய்வதற்காக-

இந் நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால் அதற்கு உமது மறுமொழி ஏதேனுமிருப்பின் 2008 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 26 ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னர் நீதிமன்றில் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப் படுத்தப் படுவதோடு சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரர் இல்லாமலே மேற்கொண்டு நடாத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றீர்.

பதிவு பெற்ற சட்டத்தரணி மூலம் நீர் தோன்றாவிடில் , சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடியமுகவரியொன்றைக் கூறும் விபரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

வரையப்பட்டது.
பி. ஜே .அன்ரனி
வழக்காளியின் சட்டத்தரணி

நீதிமன்றக் கட்டளைப்படி
து.சிறிமோகன்
பதிவாளர் – மாவட்ட நீதிமன்றம்.

குறிப்பு : -விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு கூப்பிடுந் திகதி பற்றிய அறிவித்தலை நீவிர்பெற விரும்பினால் பதிவு செய்யப்பட்ட முகவரியொன்றை இந் நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதற்கும் செலவை மேவுவதற்கும் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும், 80 ம் பிரிவின் மூலம் நீவிர்தேவைப்படுத்தப்படுகின்றீர்.

து.சிறீ மோகன்
கையொப்பம்
பதிவாளர்.

2008 ம் ஆண்டு 05 ம் மாதம் 06 நாளாகிய இன்று (சி/1152)

வாழ்வில் மனிதனை சந்தோஷத்தின் அருகாமையில் அழைத்துச் செல்பவை சுதந்திரம், சுகம், மனஅமைதி!

-இந்தியா

வலம்புரி

# சட்டமா அதிபரின் உறுதி

கொழும்பிலிருந்து தமிழ் மக்கள் பலாத்காரமாக வெளியேற்றப்படமாட்டார்கள் என, சட்டமா அதிபர், உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பொலிஸ்மா அதிபர் ஆகியோரின் சார்பிலேயே சட்டமா அதிபர் மேற்படி உறுதி மொழியைக் கொடுத்துள்ளார்.

பலாத்காரமாக தமிழ் மக்கள் கொழும்பிலிருந்து வெளியேற்றப்படமாட்டார்கள் என சட்டமா அதிபர் கூறியதற்குள் ஓர் உள்ளார்ந்த கருத்தும் இருக்கவே செய்கிறது.

அதாவது கொழும்பில் தமிழ் மக்களை கைது செய்தல், கடத்துதல் போன்ற நடவடிக்கையை மேற்கொள்ளும்போது அதனால் தமிழ் மக்கள் பெரும் அசௌகரியத்தை எதிர்நோக்குவர்.

இதனால் அவர்கள் கொழும்பை விட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

இது சட்டமா அதிபர் கூறியவாறு பலாத்காரமான வெளியேற்றம் அல்ல. எனவே கொழும்பிலுள்ள தமிழ் மக்களை பலாத்காரமாக வெளியேற்ற மாட்டோம் என்பதற்கப்பால் தமிழ் மக்களின் இருப்பிடங்களில் இரவு வேளைகளில், அதிகாலையில் நடத்தும் தேடுதல் மனித உரிமைகளை மதிக்காத வகையில் இரவுநேர ஆடையுடன் ஆண்கள், பெண்கள் என்ற பேதமின்றி அவர்களை பொது இடத்திற்கு அழைத்துச் செல்லுதல், கைது செய்தல் போன்ற நடவடிக்கைகளையும் நிறுத்துவதென்ற உத்தரவாதத்தைப் பெறவேண்டிய ஓர் தேவை, உயர் நீதிமன்றிற்குண்டு.

இவ் உத்தரவாதத்தைப் பெறத் தவறும் சந்தர்ப்பத்தில், தமிழ் மக்கள் கொழும்பில் நிம்மதியாக வாழ முடியாத சூழ்நிலை ஏற்படும்.

திட்டமிட்டே தமிழ் மக்களுக்கு தீங்கிழைத்து அதன் மூலம் அவர்களை அங்கிருந்து வெளியேற்றும் நாடகம் நடக்கும் என்பது நிறுதிட்டமான உண்மை.

எனவே தேடுதல்,தமிழ் மக்களை கைது செய்தல் போன்ற நடவடிக்கைகளையும் நிறுத்தி தமிழ் மக்களின் உரிமையை, கௌரவத்தைப் பாதுகாக்க நீதி பரிபாலனம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இல்லாத சந்தர்ப்பத்தில் எந்த உத்தரவாதமும் வெற்றி தரமாட்டாது.

# அமெரிக்காவின் கருத்து கவனத்தை திசை திருப்பும் நோக்கிலானது

## பாலித கொஹன குற்றச்சாட்டு

(கொழும்பு)

பயங்கரவாதம் தொடர்பான அறிக்கை உட்பட இலங்கை தொடர்பாக அமெரிக்கா வெளியிட்டிருக்கும் கருத்தானது கவனத்தைத் திசைதிருப்பும் நோக்கிலானது என இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கொஹன தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் அறிக்கை துல்லியமானது அல்ல. அமெரிக்கா உட்பட 27 நாடுகளில் விடுதலைப்புலிகள் அமைப்பு தடைசெய்யப்பட்டுள்ள நிலையில் கவனத்தை திசைதிருப்பும் நோக்கிலேயே அமெரிக்காவின் அறிக்கையில் இலங்கை தொடர்பான குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டுள்ளன என்று கொழும்பு ஆங்கில ஊடகமொன்றிடம் அவர்கூறியுள்ளார்.

அப்பாவிப் பொதுமக்களை இலக் கு வைத்து விடுதலைப்புலிகள் தொடர்ந்தும் தாக்குதல்களை நடத்தி வருவதாக பயங்கரவாதம் தொடர்பான அறிக்கையில் குறிப்பிட்டிருந்த அமெரிக்கா, விடுதலைப்புலிகளை ஒடுக்குவதற்காக விடுதலைப்புலிகளுக்கு எதிரான துணை இராணுவக் குழுக்கள் பயன்படுத்தப்படுகின்றன என்ற சந்தேகத்தையும் வெளிப்படுத்தியிருந்தது.

அத்துடன், கடந்த வருடம் கிழக்கை மீட்டிருந்தபோதும் அங்கு தேர்தல்களை நடத்தி, அதிகாரங்களைப் பகிர்ந்து பொருளாதார அபிவிருத்தியை அங்கு ஏற்படுத்தக்கூடிய திறமை இலங்கை அரசாங்கத்துக்கு இருக்கவில்லையென அமெரிக்காவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

உலகநாடுகள் முன்னோக்கிச் சென்று கொண்டிருப்பதுடன் கிழக்கில் நடைபெறவிருக்கும் மாகாண சபைத் தேர்தல் வெற்றிகரமாக நடைபெற வேண்டும் என்பதில் சர்வதேச நாடுகள் உதவி வருகின்றன.நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலைக் கண்காணிப்பதற்கு முன்னணி தேர்தல் கண்காணிப்பாளர்கள் வரவழைக்கப்பட இருக்கின்றனர் என பாலித கொஹன அந்த ஊடகத்திடம் தெரிவித்துள்ளார்.



**அமெரிக்காவின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை -தூதரகப்பேச்சாளர்**

மோதலில் ஈடுபட்டிருக்கும் இரண்டு தரப்புத் தொடர்பாகவும் அமெரிக்காவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்ததுடன், ஒரு தரப்பினருக்கு மாத்திரம் முக்கியத்துவம் வழங்கப்பட வில்லையென இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் பேச்சாளரும், பொது விவகார ஆலோசகருமான டெறி வைட் கூறியுள்ளார். விடுதலைப்புலிகளை தடை செய்த நாடுகளில் அமெரிக்காவே முதல் நாடு என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாம் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் நிலைப்பாட்டிலேயே உள்ளோம் என அமெரிக்கத் தூதரகப்பேச்சாளர் அந்த ஊடகத்திடம் தெரிவித்துள்ளார். (அ-5)

# வாழைச்சேனை கடதாசி ஆலையில் இன்று முதல் உற்பத்தி மீள் ஆரம்பம்

(கொழும்பு)

11 வருடங்களாக மூடப்பட்டிருந்த வாழைச்சேனை கடதாசி ஆலை இன்று மீண்டும் திறந்து வைக்கப்படவுள்ளது.

வாழைச்சேனை கடதாசி ஆலை திறந்து வைக்கப்படுவதன் மூலம் இலங்கையின் கடதாசித் தேவையை 10முதல் 15 சதவீதம் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்குமென கடதாசி ஆலையின் தலைவர் எஸ். அமரசிங்க தெரிவித்துள்ளார்.

1997 ஆம் ஆண்டு மூடப்பட்ட இந்தக் கடதாசி ஆலை தற்போது கிழக்கின் உதயத்தின் ஒரு நடவடிக்கையாக திறந்து வைக்கப்படுகிறது. இந்தக் கடதாசி ஆலையின் தொழிற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நாளாந்தம் சுமார் 10 தொன் கடதாசி உற்பத்தியைப் பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஆரம்பத்தில் மாதத்திற்கு 300 தொன் கடதாசி உற்பத்தி செய்ய முடியும். அத்துடன் இந்த உற்பத்தியை 3 மாதத்தில், மாதாந்தம் தலா 500 தொன்னாக அதிகரிக்க முடியும் எனவும் எஸ். அமரசிங்க கூறியுள்ளார். 3ஆயிரம் ஊழியர்களைக் கொண்டியங்கிய இந்த நிறுவனம் பல்வேறு தவிர்க்க முடியாத காரணங்களால் மூட வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த நிலையில் ஊழியர் கள் கட்டம் கட்டமாக நீக்கப்பட்டு தற் போது 240 ஊழியர்கள் மாத்திரமே இருப் பதாக தேசிய கடதாசி கூட்டுத்தாபனத் தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதனுடன் தற்போது 2 இயந்திரங்கள் மாத்திரமே உபயோகிக்கக்கூடிய நிலையில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-7)

# நேர்முகப் பரீட்சை பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

மாகாண அலுவலக பணிப்பாளர் சேவையில் இருந்து சாரதி பதவிக்கு நியமனம் செய்வதற்கான நேர்முகப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாகவும் நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று யாழ். பிராந்திய ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இந் நேர்முகப்பரீட்சை இன்று புதன் கிழமை நடைபெற இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-19)

# உடற் பயிற்சிப் போட்டி

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையேயான உடற் பயிற்சிப்போட்டி இம் மாதம் 12 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு நெல்லியடி மத்திய மாகாவித்தியாலயத்தில் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வே. வல்லிபுரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாராட்சி வலய கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா கலந்து கொள்ளவுள்ளார். (ஓ-19)

# புதிய கல்விச் சட்ட உருவாக்கத்துக்கு அமைச்சரவையில் விசேடகுழு நியமனம்

(கொழும்பு)

இலங்கையின் கல்வித் துறையில் புதிய கல்விச் சட்டம் ஒன்றினை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

கல்வி துறையில் தற்போது காணப்படும் சட்டமுறைகளை மறுசீரமைத்து தற்கால, தேவைக் கேற்ப புதிய ஒழுங்கு விதிகளுடன் புதிய கல்விச் சட்டம் ஏற்படுத்தப்படவுள்ளது. இதற்கென அமைச்சரவையினால் கலாநிதி ஜி.பி. குணவர்த்தன தலைமையிலான விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் கல்விக் கட்டமைப்புடன் தொடர்புடைய பல்வேறு தரப்புடனும் கலந்துரையாடல்களை மேற்கொண்டு அவர்களுடைய கருத்துக்களைப் பெற்று புதிய கருத்துக்களை புதிய கல்விச் சட்டத்தை வகுப்பதற்கான நடவடிக்கைகளை இந்தக்குழு மேற்கொள்ளவுள்ளது.

இலங்கையின் கல்வித்துறையில் புதிதாக மேற்கொள்ள வேண்டியுள்ள மறுசீரமைப்புக்கள் தொடர்பான முன்மொழிவுகளை அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டுள்ள விசேட குழு கல்வியமைச்சருக்கு சமர்ப்பிக்கவுள்ளது. (அ-7)

## ஓலைச் சுவடிகள் 27 — தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

**நம்பிக்கைகளும் ஆசாரங்களும்**

**குத்து விளக்கில் எத்தனை திரிகள் பொருத்தி பற்றவைக்க வேண்டும்?**

'ஏகவர்த்திம் மஹா வியாதிர்
துவிவர்த்திஸ்து மஹாத்தனம்
த்ரிவர்த்திர் தரித்ரதா
பஞ்சவர்த்திஸ்து பத்திரம் ஸ்யா -
துவி வர்த்திஸ்து சுசோபனம்'

வர்த்தி என்றால் திரி என்று பொருள். மாலை நேரம் இறைவனுக்கு அர்ப்பணம் செய்வதற்காக பற்றவைக்கும் குத்து விளக்கின் திரியைப் பற்றியே மேலே கொடுக்கம் மந்திரத்தில் குறிப்பிட்டுள்ளது.

விளக்கில் எத்தனை திரிகள் இருந்தால் என்னவென்று புதிய தலைமுறை வினவலாம். ஆனால் இதற்கு பதில் கூறுமுன் பல விஷயங்களை விவரிக்க வேண்டியதாயிருக்கும். ஒரு திரிமட்டும் பொருந்தி விளக்கேற்றினால் வயதானவர்கள் கோபப்படுவார்கள். ஒற்றைத் திரி நோயின் அடையாளம் என்பார்கள். மூன்று திரியில் விளக்கேற்றினால் அது அலட்சியத்தின் லட்சணம் என்றும் நான்கு திரியானால் தரித்திரம் என்றும் அறிவுள்ளவர்கள் கூறுவார்கள். இரண்டு திரியைப் பொருத்தி விளக்கேற்றினால் மிக நன்று. கிழக்கு நோக்கியும் மேற்கு நோக்கியுமானால் உத்தமம். இதைவிட ஐந்து திரிகள் இடுவது மிக உசிதமானது என்றெல்லாம் ஆசாரியர்கள் விதித்துள்ளனர்.

திரிகள் எதனையானாலும் ஒளியில் வேறுபாடுண்டாகும் என்பதல்லாமல் வேறென்ன உண்டு என்ற கேள்விக்கு பதில் கூறுவது மிகவும் சிக்கலானது. 'டௌசிங் ராட்டு என்ற சிறு கருவியால் சோதனைகள் செய்து இது சம்பந்தமான சில உண்மைகளை விஞ்ஞானம் வெளிப்படுத்தியுள்ளது. ஒரு திரி மட்டும் பொருந்தி எரிய விட்ட விளக்கிலிருந்து எதிர் மறை சக்தி பரவுகின்றது என்று தெரிகின்றது. இரு திரிகளால் எரியும் விளக்கில் கண்டது அனுகூலமான சக்தி. மூன்று, நான்கு திரிகளால் எரியும் விளக்கிலிருந்து எதிர்மறை சக்தியே வெளிப்பட்டது. ஐந்து திரிகள் பொருந்திய விளக்கிலும் அனுகூலசக்தி காணப்பட்டது.

இந்த விஞ்ஞான இரகசியத்தை புரிந்துகொண்டு தான் இரண்டு அல்லது ஐந்து திரிகள் இட்டு விளக்கேற்ற வேண்டும் என்று ஆசாரியர்கள் விதித்தனர்.

# வன்முறைகளில் ஈடுபடுவோர் மீது துப்பாக்கிச் சூடு நடத்த உத்தரவு

கிழக்கு மாகாணசபைத் தேர்தலின் போது வன்முறையில் ஈடுபடுவோர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரத்ன தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கென 15 ஆயிரம் பொலிஸார் ஈடுபடுத்தப்படவுள்ளனர். ஒவ்வொரு தேர்தல் சாவடியிலும் 5 பொலிஸார் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ளார். தேர்தல் நாளன்று அரச வாகனங்கள், இலக்கத் தகடு அற்ற வாகனங்கள் தேர்தல் தொகுதிகளில் நடமாடினால் அவற்றை கைப்பற்றி உரிய சட்டநடவடிக்கை மேற்கொள்ளவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என காமினி நவரத்ன மேலும் கூறியுள்ளார். (ச-5)

## கைது செய்யப்பட்டோர் குறித்து அறிய வசதி

பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள், கைது செய்யப்பட்டவர்களின் விபரங்களை கைது செய்யப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் அறிந்து கொள்வதற்காக புதிய அவசர தொலைபேசி சேவை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த தொலைபேசி சேவையை இடர் முகாமைத்துவ மனித உரிமைகள் அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது. கைது செய்யப்பட்டுள்ளவர்கள், தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பான விபரங்களை 011 2676513,0602119246 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த புதிய தொலைபேசி சேவை இன்று தொடக்கம் நடைமுறைக்கு வரும் என்று இடர் முகாமைத்துவ மனித உரிமைகள் அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-2)

## புளொட் அமைப்பின் முக்கியஸ்தர் சுட்டுக் கொலை

புளொட் அமைப்பின் சிரேஷ்ட உறுப்பினரும் முக்கியஸ்தருமாகிய பவன் என்று அழைக்கப்படும் செல்வராசா என்பவர் பூந்தோட்டம் சந்திக்கருகில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்து கொண்டிருந்தபோது நேற்று சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக புளொட் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

இவருடன் பயணம் செய்த மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர். வீதியோரத்தில் மறைந்திருந்தவர்கள், துப்பாக்கிப் பிரயோகத்தின் பின்னர் கொல்லப்பட்டவர்கள் பயணம் செய்த மோட்டார் சைக்கிளையும் அபகரித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-2)

## பேராசிரியர் இராஜரட்ணம் லண்டனில் காலமானார்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பல்கலைக்கழகத்தின் முன்னோடி விரிவுரையாளரும் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் கலைப் பீடாதிபதியுமான பேராசிரியர் இராஜரட்ணம் (வயது-82) லண்டனில் காலமானார்.

பொருளியல் வரலாற்றில் சிறந்த புலமை பெற்ற இவர் மாணவர்கள் மத்தியில் சிறந்த விரிவுரையாளராகத் திகழ்ந்தார். யாழ். பல்கலைக்கழகத்தின் பொருளியல்துறை, வணிக முகாமைத்துறைகளின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியுள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தனது கல்விப்பணியை ஆரம்பித்த இவர் 1974 இல் யாழ்.பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்ட போது யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றப்பட்டார். (சு)

## கந்தளாயில் மோதல் 3 படையினர் காயம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டம் கந்தளாய் சித்தாராப் பகுதியில் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் 3 படையினர் காயமடைந்துள்ளனர் என்று படைத்தரப்பு தெரிவித்துள்ளது. (எ-5)

## கைவிடப்பட்ட நிலையில் ஆண் குழந்தை மீட்பு

(யாழ்ப்பாணம்)

பிறந்து சில நாட்களான ஆண் குழந்தை ஒன்று கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டு அரச சிறுவர் இல்லத்தில் ஒப்படைக்கப்பட்டது. உடுவில் மல்வம் பிரதேசத்திலுள்ள பாடசாலை வேலி ஒன்றில் பை ஒன்றினுள் வைக்கப்பட்ட நிலையில் அக்குழந்தை பொலிஸாரால் நேற்று முன்தினம் மீட்கப்பட்டது.

குழந்தை மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக மல்லாகம் நீதவானுக்கு அறிவிக்கப்பட்டு அவரின் உத்தரவுக்கமைய அரச சிறுவர் இல்லத்தில் ஒப்படைக்கப்பட்டது. (ச-3,4)

## நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இதுவரை பதிவு செய்யப்படாதுள்ள பிறப்பு இறப்புக்களை பதிவு செய்தல் தொடர்பான நடமாடும் சேவை எதிர்வரும் 10ஆம் திகதி சனிக்கிழமை காலை யாழ்.வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறும்.

பிறப்பு பதிவு இல்லாதவர்கள் தங்கள் பிறப்புக்களைப் பதிவு செய்வதற்கு இச்சேவையைப் பயன்படுத்துமாறு யாழ். பிரதேச செயலர் மரியதாஸன் ஜெசுவ கேட்டுக் கொண்டுள்ளார். (அ)

## எழுத்துப் பரீட்சை முடிவுகளை வெளியிடுவதில் தாமதம்

(யாழ்ப்பாணம்)

சாரதி அனுமதிப்பத்திர எழுத்துப்பரீட்சை முடிவுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்கள உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் 23.04.2008, 24.04.2008, 28.04.2008, 30.04.2008 மற்றும் 05.05.2008 ஆகிய திகதிகளில் நடத்தப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான எழுத்துப் பரீட்சை முடிவுகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் இன்று வெளியிட முடியாதுள்ளது என்பதை மன வருத்தத்துடன் அறியத்தருகிறேன்.

மேலும் புதிய மோட்டார் சைக்கிள் பதிவிற்கான வாகனப் பரிசோதனை, பரீட்சை முடிவுகள் மற்றும் செயன்முறை பரீட்சைக்கான திகதி என்பன மிக விரைவில் பத்திரிகைகள் மூலம் அறிவிக்கப்படும் என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன் என்றுள்ளது. (ச)

## ஆயுதக்குழுக்களின்...

இத்தகைய பின்னடைவுகள் வருகின்றன. அரசாங்கம் சட்டத்திற்கு முரணாக ஆயுதங்களை வைத்திருப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஆனால் கிழக்கில் சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருப்பவர்களும் தேர்தலில் போட்டியிடுகின்றனர். எனவே கிழக்குத் தேர்தல் முறையாக நடைபெற வேண்டுமாயின் சட்டவிரோத ஆயுதங்கள் களையப்பட வேண்டும்.

படையினரால் மீட்கப்பட்ட கிழக்கில் இன்று ஆயுதக்குழுக்களின் நிர்வாகம் ஏற்படுவதனை அரசாங்கம் விரும்புகிறது. படையினரதும் பொலிஸாரினதும் முகாம்களுக்கு அண்மையில் ஆயுதக்குழுக்களின் முகாம்களை அமைக்க அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

குறிப்பாக மட்டக்களப்பு நகர், ஏறாவூ, கிரான், செங்கலடி போன்ற இடங்களில் ஆயுதக் குழுக்களின் முகாம்கள் உள்ளன.

இது குறித்து அரசாங்கம் விசாரணை செய்ய வேண்டும். இத்தகைய ஆயுதக்குழுக்களால் பல்வேறு வேட்பாளர்கள் மிரட்டப்பட்டுள்ளனர். ஆயுதக்குழுக்களின் இந்த துப்பாக்கிகள் அரசிற்கு எதிராக என்றோ ஒரு நாள் திரும்பும் என்பதனை இப்போதே உறுதியுடன் கூறுகின்றோம்.

கிழக்கில் உள்ள ஆயுதக்குழுக்களின் இருப்பிடங்கள் மற்றும் செயற்பாட்டு நிலையங்களை பாரிய அச்சுறுத்தலுக்கு மத்தியில் புகைப்படம் பிடித்து வைத்திருக்கின்றோம். இந்த ஆதாரங்களை அடிப்படையாக வைத்து ஆயுதக்குழுக்களுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (எ-5)

## இந்திய...

வைத்துக்கொள்ள இலங்கை விரும்புகிறது. அது நடக்கக் கூடாது என்று இந்தியா கருதுகிறது. அதுதான் அங்கிருக்கும் சின்னச் சின்னப் பிரச்சினைகள். அதனால் அதுபற்றி நீங்களே முடிவெடுத்துக் கொள்ளுங்கள் என்றார் விஜயகாந்த்.

இலங்கைப் பிரச்சினையில் இந்தியா நேரடியாக தலையிட வேண்டுமென்றும் இலங்கைத் தமிழர்களின் மனித உரிமைகளை பாதுகாக்க உதவ வேண்டும் என்றும் அவர் கருத்துத் தெரிவித்தார். (ச-5)

## பிரித்தானிய...

51, 53, 55, ஆகிய படைப் பிரிவுகளையும் பிரித்தானியக் குழுவினர் பார்வையிட்டுள்ளனர். கொழும்பு திரும்பும் முன்னர் கடற்படையினரையும் பிரித்தானிய படைக்குழுவினர் சந்தித்து ஆலோசனை நடத்தினர் என்று படைத்தரப்பு இணையத்தளம் தெரிவித்துள்ளது.

பிரித்தானிய தூதரக படைப்பிரிவு ஆலோசகர் ஏ.எஸ்.காசுடன் பிரித்தானியாவின் லெப். கேணல் டான் றெக்ஸ், விங் கொமாண்டர் அண்டி லீ ஆகியோர் யாழ்.குடாநாட்டிற்கு வந்து திரும்பியுள்ளனர். (ச-5)

## ஆய்வுக் கட்டுரை ஒப்புவித்தல்

(யாழ்ப்பாணம்)

முதுகலைமாணி அபிவிருத்திக் கற்கை நெறி மாணவர்களுக்கான 'ஆய்வுக் கட்டுரை ஒப்புவித்தல்' நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளது.

இது தொடர்பாக பங்குபற்றும் மாணவர்கள் இணைப்பாளருடன் தொடர்பு கொண்டு திகதியையும் நேரத்தையும் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## பிள்ளையான் குழுவுக்கு...

அதிகமானோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

துணைப்படையான பிள்ளையான் குழுவிற்கு எதிரான பதாகைகளை ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றோர் ஏந்தியிருந்தனர். துணைப்படை ஆயுதக்குழுக்களைத் தேர்தலில் போட்டியிட அனுமதித்தமை குறித்து தேர்தல் ஆணையாளரையும் ஆர்ப்பாட்டக் குழுவினர் விமர்சித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பேசிய திஸ்ஸ அத்தநாயக்க, கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் பிள்ளையான் என்ற ஆயுதக்குழுவை முன்னிறுத்தி அரசாங்கம் நடத்தும் நாடகத்திற்கு எதிராகவே நாம் இந்தப் போராட்டத்தை தொடங்கியுள்ளோம்.

பிள்ளையான் குழுவுடன் கூட்டுச்சேர்ந்து போட்டியிடுவதன் மூலம் அரசாங்கம் தனது அராஜகங்களைக் கிழக்கில் இலகுவாக அரங்கேற்றி வருகின்றது என்றார். (ச-5)

## பேரா. வித்தியானந்தன் நினைவுச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் சு.வித்தியானந்தனின் நினைவுச் சொற்பொழிவு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கனும், நினைவுப் பேருரையை யாழ்.பல்கலைக்கழக கல்வியியல்துறை விரிவுரையாளர் கலாநிதி.த.கலாமணியும் வழங்கவுள்ளனர். (அ-7)

## பிலியந்தல குண்டுத் தாக்குதலுடன்...

கடந்த ஒரு மாதத்திற்குள் இடம்பெற்ற பல்வேறு மோதல்களில் படைத்தரப்பில் 121 பேர் பலியானதுடன் 745 படையினர் காயமடைந்துள்ளனர். இதேவேளை பொதுமக்கள் 56 பேர் பலியானதுடன் 145 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் அவர் சொன்னார். அவசர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பதற்கான பிரேரணையை நாடாளுமன்றத்தில் நேற்று சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது,

படையினர் களத்தில் முன்னின்று போராடிக் கொண்டிருக்கின்ற நிலையில் மக்கள் ஆணையைப்பெற்ற அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு மக்கள் பூரண ஒத்துழைப்பு நல்க வேண்டும். அத்துடன் சகல சக்திகளும் அரசாங்கத்துடன் கைகோர்க்க வேண்டும்.

தனிப்பட்ட போராட்டத்தின் மூலமாக வெற்றி பெற முடியாது. தெற்கில் அபிவிருத்தி நடவடிக்கைகளையும் கிழக்கில் துரித அபிவிருத்தி நடவடிக்கைகளையும் ஏற்படுத்தி அங்கு ஜனநாயகத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு சகல சக்திகளும் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

கிழக்கில் ஜனநாயகத்துக்கான ஒளிக்கதிர்கள் விழுந்துள்ளன. துப்பாக்கி ரவைகளுக்கு வாக்குச் சீட்டுக்கள் மூலமாக பதில் கிடைக்கும். வடக்கில் பயங்கரவாதிகளுக்கு இராணுவ நடவடிக்கையின் மூலமாக பதில் கிடைக்கும். பயங்கரவாதிகளின் பிரசாரத்துக்கு எதிராகவும் பிறந்த மண்ணுக்கு துரோகம் இளைப்போருக்கு எதிராகவும் அரசாங்கம் செயற்படுவதுடன் வடக்கில் மக்களை மீட்கும் நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுக்க வேண்டியுள்ளது.

தரை மார்க்கமாகவும் ஆகாய வழியாகவும் மேற்கொள்கின்ற தாக்குதல்களினால் பயங்கரவாதிகள் பின்வாங்குகின்றனர். அதனை படையினர் திறம்படச்செய்து கொண்டிருக்கின்றனர்.

பலியாகின்ற, காயமடைகின்ற படையினரின் எண்ணிக்கையை கணக்கிடும் கணக்கீடுகளை நிறுத்துவதற்கான காலம் வெகு தொலைவில் இல்லை. இறப்பிற்கு ஓர் அர்த்தம் இருக்க வேண்டும். அதனை படையினர் முன்னெடுக்கின்றனர் என்றார். (ச-5)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தின் ஏற்பாட்டில் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட வறிய மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் புலமைப் பரீட்சை சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் மோகன்ராஜ் தலைமையில் நடைபெறும். (ந-2)


**Microsoft Certified Systems Engineer**

பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில்

- ★ குறுகியகால நிறைவான வகுப்புக்கள்
- ★ Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்
- ★ Network Manager, System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
- ★ வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்

புதிய பிரிவுகள் ஆரம்பம் 07.05.2008 08.00 a.m.

மாணவர் விருப்பிற்கு மேலதிக வகுப்பு நேரங்கள்

பதிவு செய்வோருக்கு விசேட சலுகைகள்

விபரங்கள் நேரில்

324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்

MCS Supported By UNDP/JRRP



**நீங்களும் கணனி பட்டதாரியாகலாம் O/L / A/L தடையல்ல**

- இலங்கை பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் உடையது
- யாழிலேயே கற்கும் வசதி
- பகுதிநேர வெளிவாரி கற்கைநெறி

16.05.2007 அன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடந்த பட்டமளிப்பு வைபவத்தின் போது சிறப்பு விருது பெற்ற நிறுவனம்



விண்ணப்படிவங்களிற்கும் பதிவுகளுக்கும்

09-05-2008 முன் நேரில்

324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்

MCS Supported By UNDP/JRRP



**குழந்தை பராமரிக்க பெண் தேவை**

மாலைதீவில் பணியாற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குடும்பம் ஒன்றிற்கு குழந்தையை பராமரிக்க பெண் ஒருவர் உடன் தேவை (வயது 40-45)

- ❖ சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்
- ❖ மாலைதீவு செல்வதற்கான ஒழுங்குகள் செய்து தரப்படும்

சுயவிபரங்களை:- விளம்பர இல. 100, வலம்புரி

இல. 3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பவும் அல்லது நேரில் வரவும்.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.05.2008இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.